**O.S. No. 189 /2017**

**Date:17.03 .2026**

**பிவா.சா.2 முத்தையா தேவர்**

**1,2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கருப்பாயி அம்மாள், 1ம் பிரதிவாதி சுப்பையா கோனார் மற்றும் அவரது மக்கள் ஆகியோர்கள் சேர்ந்து 08.02. 1996 ல் தபசில் சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்களா என்றால் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். நான் வாங்கிய கிரையத்திற்கு முன்பு சுப்பையா கோனாருக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணம் பட்டா எண். 326 என்றால் சரிதான். கிரையத்திற்கு பின்பு தபசில் சொத்து எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதன் படி நான் தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எந்த ஊர் என்றால் திருமலாபுரம் ஆகும். இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் உடையார் கோனார் தாக்கல் செய்துள்ளார். உடையார் கோனார் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு சகோதரர் ஆவார். எனக்கும், வாதிக்கும் மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் ஒரே ஊர் என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 40 வருடங்கள் இருக்கும். நான் கிரையம் பெற்ற போது வாதியான உடையார் கோனார் 1ம் பிரதிவாதி சுப்பையா கோனாருக்கு தம்பி என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரையம் வாங்கிய காலகட்டத்தில் உடையார் கோனாரிடம் கையெழுத்து எதுவும் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை . நான் பத்திரம் போட்ட காலத்தில் யார் யாரிடம் கையெழுத்து வாங்கினேன் என்றால் உடையார் கோனார் மற்றும் சுப்பையா கோனார் என்பவர்களின் அம்மாவிடம் கையெழுத்து வாங்கினேன், வேறு யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை. தாவா சொத்துக்கள் வேலு

கோனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவருடைய வாரிசுகளான உடையார் கோனாரையும், வாரிசுகளையும் மறைத்து கையெழுத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணம் பற்றிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதி கூற்றில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்துக்கள் வாதி உடையார் கோனாருக்கு சரி பாதி பங்கு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.